www.Padasalai.Net www.TrbTnpsc.com

V11T

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

# வகுப்பு 11

## பொதுத்தமிழ்

காலஅளவு: 3.00 மணிநேரம் மொத்த மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

14×1=14

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1) பாயிரம் இல்லது ............. அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2) மண்ணுக்கு வளம் சேர்ப்பன .............
அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

3) கூற்று - "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
அ) கூற்று சரி, விளக்கம் தவறு. ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி.
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு.

4) துன்பப்படுபவர் .............
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

5) 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

6) நிழல் போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?
அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு

7) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாது குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

8) "கெடுக", "குறிப்புணர்வார்" ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு .............
அ) வியங்கோள் வினைமுற்று, வினையாலணையும் பெயர்
ஆ) வினைத்தொகை, தொழிற்பெயர்
இ) உம்மைத்தொகை, பெயரெச்சம்
ஈ) உரிச்சொற்றொடர், பண்புத்தொகை

9) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று .............
அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

10) அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் - யார் யாரிடம் கூறியது?
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

11) 'என் வாழ்வு என் கைகளில்' என்று நம்பியவர் .............
அ) விவேகானந்தர் ஆ) சுந்தர ராமசாமி இ) ப. ஜீவானந்தம் ஈ) காந்தியடிகள்

12) பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே ............. என்று தமிழில் வழங்கப்படும்.
அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) செய்தி, வழிபாடு, பயன்பாடு

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

13) மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டவர் ..............

அ) மீனாட்சிசுந்தரனார் ஆ) ஆபிரகாம் பண்டிதர்

இ) தாமோதரனார் ஈ) டி.கே.சி

14) தமிழின் முதல் பாவடிவ நாடக நூல் ..............

அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்

இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×2=6**

15) இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

17) ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

18) படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19) தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக.

20) ''கோட்டை'' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

21) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

23) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**

கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்து வாழ்ந்து நாடு வந்தனர்.

24) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

உலை, உளை, உழை

25) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**

அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

ஆ) தாமரை தடாகத்தில் மீன்கள் துள்ளி பாய்ந்தது.

26) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

கால்நடை

27) **செய்தித் தொடராக்குக:**

என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை.

28) **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:**

அ) விசா ஆ) சந்தோஷம்

29) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**

அ) பொதுச்சிறப்பு ஆ) பேரழகு

30) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) ஏகுமின் ஆ) மலிந்த

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

31) காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

32) ''சலச வாவியில் செங்கயல் பாயும்'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

34) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

35) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36) சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

37) ஃபிரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

38) தாமஸிகம் என்றால் என்ன?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×4=12**

39) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு - **இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**(அல்லது)**


சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)**

''தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினிகாட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ''.

- **கம்பர்**

41) பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




42) **தமிழாக்கம் தருக:**

1. Knowledge Rules the World.
2. You must be the change. You wish to see to the world.
3. A picture is worth a thousand words.
4. Culture does not make people. People make culture.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

43) **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

அ) எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும்.

ஆ) அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம்.

இ) கண்ணிலும் எழுதலாம்; வெண் தாளிலும் எழுலாம்.

ஈ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவே தான்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** **3×6=18**

44) அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

**(அல்லது)**

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

45) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46) அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) நர்த்தகி நடராஜனின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி - V

47) **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

அ) ''அம்ம வாழி'' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்.

ஆ) ''நன்று'' என முடியும் குறளை எழுதுக.

----------

www.Padasalai.Net